## இடைத்தரகர்கள் மூலம் பணம் வசூல் செய்து அரசு வழக்கறிஞர்கள் நியமனம்!

# அமைச்சர்கள் புஸ்ஸி என்.ஆனந்த் - சி.டி.ஆர். நிர்மல் குமார் மீது FIR பதிந்து விசாரிக்க வேண்டும்!

## தமிழ்நாடு லஞ்ச ஒழிப்புத் துறையிடம் – கழக துணை அமைப்புச் செயலாளர் ப.தாயகம் கவி புகார் மனு!

**சென்னை, ஜூலை 10-**

**தமிழ்நாடு முழுவதும் அரசு வழக்கறிஞர்கள், கூடுதல் அரசு வழக்கறிஞர்கள் மற்றும் அரசு தரப்பு வழக்கறிஞர்கள் நியமனத்தில் ஊழல் நடைபெற்றுள்ளது தொடர்பாக லஞ்ச ஒழிப்புத் துறை வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்த வேண்டும் என முன்னாள் சட்டமன்ற உறுப்பினரும், கழக துணை அமைப்புச் செயலாளருமான ப.தாயகம் கவி, நேற்று (08.07.26) தமிழ்நாடு லஞ்ச ஒழிப்புத் துறைக்கு (DVAC) புகார் அளித்துள்ளார்.**



அவரது புகார் மனுவில் வருமாறு

1. நீதிமன்றங்களில் அரசு சார்பாக வாதாடும் அரசு வழக்கறிஞர்கள் மற்றும் அரசு தரப்பு வழக்கறிஞர்களின் நியமனம் என்பது மிக உயர்ந்த பொது முக்கியத்துவம் வாய்ந்த பொறுப்பாகும். இந்தச் செயல்பாட்டில் நடக்கும் ஊழல் என்பது வெறும் நிர்வாக முறைகேடு மட்டுமல்ல; அது சட்டத்தின் ஆட்சி, அரசியலமைப்புச் சட்டம் 14 மற்றும் 21-இன் கீழ் குடிமக்களுக்கு வழங்கப்பட்டுள்ள உரிமைகள் மற்றும் மக்களின் தீர்ப்பின் மீதான நேரடித் தாக்குதலாகும். தகுதி, நேர்மை மற்றும் தொழில்முறைத் திறனுக்குப் பதிலாக, இந்த பதவிகள் விலைக்கு வாங்கப்படுவதாகவும், விருப்பமுள்ள வேட்பாளர்களிடம் சட்டவிரோதமாகப் பணம் கோரப்பட்டு, அதுவே தேர்வுக்கான முக்கிய தகுதியாக மாற்றப்பட்டிருப்பதாகவும் நம்பகமான தகவல்கள் உறுதியாகத் தெரிவிக்கின்றன.

**அமைச்சர்கள் பெயரை பயன்படுத்தி வசூல்!**

2. தமிழ்நாடு அரசின் மதிப்பிற்குரிய தலைமை வழக்கறிஞர் அலுவலகத்திற்கு நெருக்கமானவர் என்று கூறிக்கொள்ளும் வழக்கறிஞர் திரு. லெனின் ஜெயபாலன் என்பவர், அரசு வழக்கறிஞர் பதவிகளுக்கு விண்ணப்பிக்கும் வேட்பாளர்களிடம், அமைச்சர் திரு. புஸ்ஸி என். ஆனந்த் அவர்களின் பெயரையும் அவரது ஆதரவையும் பயன்படுத்தி, இந்த நியமனங்கள் அனைத்தும் அவரது அதிகாரத்தின் கீழ் தான் ஒதுக்கப்படுகின்றன என்று கூறி முறையற்ற வகையில் தொடர்ந்து பணம் கோரி வசூலித்து வருவதாக எனக்கு நம்பகமான தகவல் கிடைத்துள்ளது. இதேபோல், மதுரையிலும் அதைச் சுற்றியுள்ள மாவட்டங்களிலும் செயல்பட்டு வரும் வழக்கறிஞர் பார்த்திபன் என்பவர், லெனின் ஜெயபாலனுடன் கூட்டுச் சேர்ந்து, இந்த நியமனங்கள் அமைச்சர் புஸ்ஸி என். ஆனந்த் மூலமாகவே கட்டுப்படுத்தப்பட்டு வழங்கப்படுகின்றன என்று கூறி விண்ணப்பதாரர்களிடம் பணம் வசூலித்து வருகிறார்.

3. இடைத்தரகர்களின் இந்தச் செயல்பாடு ஏதோ ஒரு தனிப்பட்ட அல்லது தற்செயலான நிகழ்வு அல்ல. வெவ்வேறு மாவட்டங்களில் செயல்படும் ஒன்றுக்கும் மேற்பட்ட வசூல் முகவர்கள், பணம் கோருவதற்கு ஒரே அமைச்சரின் பெயரையும், மற்றும் திரு. சி.டி. ஆர். நிர்மல் குமார் என்பவரது பெயரையும் தொடர்ந்து பயன்படுத்துவது, அமைச்சரின் அலுவலகங்கள் இந்த நியமனங்களுக்குப் பின்னணியாகப் பயன்படுத்தப்படுகின்றன அல்லது பயன்படுத்த அனுமதிக்கப்படுகின்றன என்பதற்கான வலுவான சூழ்நிலை ஆதாரமாகும். லெனின் ஜெயபாலன், பார்த்திபன் மற்றும் அவர்களுடன் தொடர்புடைய நபர்களால் வசூலிக்கப்பட்ட ஒவ்வொரு ரூபாயின் பணப் பரிவர்த்தனையையும் (வங்கி கணக்குகள், ரொக்கப் புழக்கம், அழைப்பு விவரப் பதிவுகள் மற்றும் பணம் கொடுத்த வேட்பாளர்களின் சாட்சியங்கள் மூலம்) DVAC விரிவாகக் கண்டறிய வேண்டும் என்று கோருகிறேன். இந்தத் தொகைகள் அமைச்சர் புஸ்ஸி என். ஆனந்த் மற்றும் அமைச்சர் சி.டி.ஆர். நிர்மல் குமார் ஆகியோரைச் சென்றடைந்ததா, அவர்களுக்குப் பலனளித்ததா அல்லது அவர்களின் அறிவுறுத்தலின் பேரில் விநியோகிக்கப்பட்டதா என்பதைத் தீர்க்கமாக நிறுவி, இந்தச் சங்கிலித்தொடரில் உள்ள ஒவ்வொரு நபரையும் விதிவிலக்கின்றி ஊழல் தடுப்புச் சட்டத்தின் கீழ் தண்டிக்க வேண்டும்.

**பணம் கொடுத்தவர்களுக்கு பதவி!**

4. கடந்த 05.06.2026 அன்று த.வெ.க (TVK) தலைமையிலான அரசாங்கத்தால் வெளியிடப்பட்ட விண்ணப்ப அறிவிப்பைத் தொடர்ந்து, விழுப்புரம் மாவட்டத்தில் அரசு வழக்கறிஞர்கள் நியமனத்தில் நடந்த முறைகேடுகள் குறித்து சென்னை உயர்நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள ஒரு பேராணை மனு (Writ Petition) இந்த முறைகேட்டுப் போக்கை உறுதிப்படுத்துகிறது. தகுந்த நடைமுறைகளைப் பின்பற்றாமல் தன்னிச்சையாகப் பட்டியல் வெளியிடப்பட்டதாகவும், விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பதற்கான காலக்கெடுவே முறைகேடாக மாற்றியமைக்கப்பட்டதாகவும் அந்த மனுதாரர் தனது பிரமாணப் பத்திரத்தில் (Affidavit) குறிப்பிட்டுள்ளார். இந்த உண்மைகளைப் பற்றி முறையான விசாரணை நடத்தினால், தகுதியுள்ள நபர்களைப் புறக்கணித்துவிட்டு, பணம் கொடுத்தவர்களுக்கு இந்தப் பதவிகளை ஒதுக்குவதற்காக அமைச்சர் புஸ்ஸி என். ஆனந்திற்கு நெருக்கமானவர்களால் எவ்வளவு சட்டவிரோதப் பணம் வசூலிக்கப்பட்டது என்பது வெளிச்சத்திற்கு வரும்.

5. அரசு வழக்கறிஞர்கள் மற்றும் பொது வழக்கறிஞர்கள் நியமனத்திற்கான வேட்பாளர்களைப் பட்டியலிடுவதிலும் பரிந்துரைப்பதிலும் பின்பற்றப்பட்ட நடைமுறைகள் வெளிப்படையானதாகவோ அல்லது நம்பகமானதாகவோ இல்லை. இது நிறுவனத்தின் அடிப்படை நேர்மைத் தரத்தைக் கூட பூர்த்தி செய்யத் தவறிவிட்டது என்று நான் எவ்வித தயக்கமும் இன்றித் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த நம்பகத்தன்மைக் குறைபாட்டிற்கு அமைச்சர் சி.டி. ஆர். நிர்மல் குமார் விளக்கமளிக்க வேண்டும். தேர்ந்தெடுக்கப்பட்ட வேட்பாளர்களின் பின்னணி, நடத்தை, தகுதி அல்லது தொழில்முறைத் தரம் குறித்து எந்தவொரு முறையான சரிபார்ப்பும் நடத்தப்பட்டதாகத் தெரியவில்லை. தங்களுக்கு வசதியான நேரத்தில் தகுதியின்மைகளைப் புறந்தள்ளிவிட்டு, பணம் கொடுத்தவர்கள் அல்லது அமைச்சர் சி.டி.ஆர். நிர்மல் குமார் மற்றும் புஸ்ஸி என். ஆனந்த் ஆகியோருக்கு நெருக்கமானவர்களுக்குச் சாதகமாக தன்னிச்சையான, வெளிப்படைத்தன்மையற்ற நியமனங்கள் செய்யப்பட்டுள்ளன. இது மாநிலம் தழுவிய ஒட்டுமொத்த தேர்வு முறை குறித்தும் ஒரு விரிவான லஞ்ச ஒழிப்பு விசாரணை நடத்தப்பட வேண்டியதன் அவசியத்தை உணர்த்துகிறது.

**திருட்டுக் குற்றவாளி அரசு வழக்கறிஞராக நியமனம்!**

6. திருப்பத்தூரைச் சேர்ந்த ஒரு வழக்கறிஞர், உள்ளூர் காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்ட ஆடு திருட்டு வழக்கில் முன்னர் குற்றவாளியாகச் சேர்க்கப்பட்டிருந்த போதிலும், அவர் திருப்பத்தூர் முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றத்தின் அரசுப் பொது வழக்கறிஞராக (Public Prosecutors) நியமிக்கப்பட்டுள்ளார் என்பது பதிவுகளில் உள்ள உண்மையாகும். குற்றவியல் நடவடிக்கைகள் நிலுவையில் உள்ள ஒரு நபரிடம், அரசு சார்பாக வழக்குகளை நடத்த ஒப்படைப்பது என்பது வெறும் நிர்வாகத் தவறு அல்ல; இது நியமன அதிகாரம் கொண்டவர்கள் வேட்பாளரின் பின்னணியைச் சரிபார்க்கவே இல்லை அல்லது சரிபார்த்தும் அவரது தகுதியின்மையைத் தெரிந்தே புறக்கணித்துள்ளனர் என்பதற்கான உறுதியான சான்றாகும். இந்த இரண்டுமே பொறுப்புக்கூறலுக்கு உட்பட்டவை என்பதால், இந்த நியமனத்திற்கு யார் ஒப்புதல் அளித்தது, எதன் அடிப்படையில் ஒப்புதல் அளிக்கப்பட்டது என்பதை DVAC பிரத்யேகமாகக் கண்டறிந்து, அதற்கேற்ப குற்றவியல் மற்றும் ஒழுங்குமுறை நடவடிக்கைகளை உறுதி செய்ய வேண்டும்.

7. தர்மபுரி மாவட்டத்தில் அரசு வழக்கறிஞர்கள் நியமனம் தொடர்பாகக் கடுமையான புகார்கள் எழுந்துள்ளன. அங்கு நிர்ணயிக்கப்பட்ட நடைமுறைகள் புறந்தள்ளப்பட்டு, 'பணத்திற்குப் பதவி' என்ற முறை பின்பற்றப்பட்டுள்ளது. விண்ணப்பங்கள் தகுதி அல்லது திறமையின் அடிப்படையில் பரிசீலிக்கப்படாமல், 3,00,000 முதல் 10,00,000 வரை சட்டவிரோதப் பணம் பெற்றுக் கொண்டே நியமனங்கள் வழங்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. த.வெ.க தர்மபுரி கிழக்கு மாவட்டச் செயலாளர் விஜயகாந்த் மற்றும் த.வெ.க மேற்கு மாவட்டச் செயலாளர் தபா சிவன் உள்ளிட்ட அரசியல் நிர்வாகிகள் இத்தகைய பண வசூலைச் செய்ததாக அல்லது அதற்குத் துணையாக இருந்ததாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. வேட்பாளர்களைத் தொடர்பு கொண்டு, பணம் தருமாறு வற்புறுத்தி, பணம் கொடுத்தால் மட்டுமே நியமனம் உறுதி என்று உறுதியளிக்கப்பட்ட அதே வேளையில், தகுதியான விண்ணப்பதாரர்கள் பரிசீலனையிலிருந்து விலக்கப்பட்டனர்.

**குற்றவியல் முறைகேடு!**

8. சுற்றியுள்ள சூழ்நிலைகள் அனைத்தும், இந்தச் செயல்பாடு லஞ்சம், அதிகார மற்றும் அரசியல் பதவிகளைத் தவறாகப் பயன்படுத்திச் செய்யப்பட்ட குற்றவியல் முறைகேடு மற்றும் பொது நியமன நடைமுறைகளை மிகக் கொடூரமான முறையில் கையாளுதல் போன்ற குற்றங்களின் கீழ் வருவதைச் சுட்டிக்காட்டுகின்றன. இந்த முறைகேடுகளும் தன்னிச்சையான தேர்வுகளும், தகுதி, திறமை அல்லது அரசுக்கான சேவை ஆகியவற்றிற்குப் பதிலாக, பணம் மற்றும் சாதி போன்ற தேவையற்ற, சட்டவிரோதமான காரணிகளாலேயே பரிந்துரை நடைமுறைகள் உந்தப்பட்டுள்ளன என்ற நியாயமான முடிவை வலுப்படுத்துகின்றன.

**சட்ட விரோதப் பண வசூல்!**

9. ஒட்டுமொத்தமாகப் பார்க்கும் போது, இவை ஏதோ தனித்தனியாக மாவட்ட அளவில் நடந்த தவறுகள் அல்ல. விழுப்புரம், திருப்பத்தூர், மதுரை மற்றும் தர்மபுரி ஆகிய மாவட்டங்களில் ஒரே மாதிரியான முறைகேட்டு நடைமுறைதான் பின்பற்றப்பட்டுள்ளது: அரசியல் ஆதரவைக் காட்டி இடைத்தரகர்கள் மூலம் பணம் கைமாறுகிறது; பணம் கொடுக்காத தகுதியான வேட்பாளர்களின் விண்ணப்பங்கள் அமைதியாக நிராகரிக்கப்படுகின்றன; குற்றப் பின்னணி, நிலுவையில் உள்ள தேர்தல் வழக்குகள் அல்லது தகுதியின்மை போன்ற காரணங்கள் தங்களுக்குச் சாதகமாகப் புறக்கணிக்கப்படுகின்றன; மேலும் இதன் மூலம் பயனடைபவர்கள் தொடர்ந்து பணம் கொடுத்தவர்களாக அல்லது உள்ளூர் அதிகார மையத்துடன் சாதி அல்லது அரசியல் ரீதியாக நெருக்கமானவர்களாக மட்டுமே இருக்கிறார்கள். வெவ்வேறு மாவட்டங்களில் காணப்படும் இந்த ஒரே மாதிரியான முறை, இது அமைச்சர் புஸ்ஸி என். ஆனந்த் மற்றும் அமைச்சர் சி.டி.ஆர். நிர்மல் குமார் ஆகியோரின் அரசியல் ஆதரவுடன் மாநிலம் தழுவி ஒருங்கிணைந்து நடத்தப்படும் சட்டவிரோதப் பண வசூல் மற்றும் அதிகார துஷ்பிரயோகத் திட்டம் என்பதற்கான சான்றாகும். எனவே, இதனைத் தனித்தனி மாவட்டப் புகார்களாகப் பார்க்காமல், ஒரு கூட்டுச் சதித் திட்டமாக (Composite Conspiracy) DVAC விசாரிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**நம்பிக்கை சீர்குலைகிறது!**

10. தகுதியற்ற மற்றும் முறையாகச் சரிபார்க்கப்படாத நபர்களை வழக்கறிஞர் பதவிகளில் நியமித்ததன் விளைவுகள் ஏற்கனவே வெளிவரத் தொடங்கிவிட்டன. அண்மைய நிகழ்வு ஒன்றில், ஒன்பது ஆண்டுகளுக்கும் மேலாக நிலுவையில் இருந்த ஒரு குற்றவியல் வழக்கு, அரசுத் தரப்பு சாட்சி நேரில் வந்திருந்தும், குற்றம் சாட்டப்பட்டவர் காணொலிக் காட்சி மூலம் ஆஜர்படுத்தப்பட்டிருந்தும், கூடுதல் பொது வழக்கறிஞர் தகுந்த காரணமின்றி ஆஜராகத் தவறியதால் மேற் கொண்டு நகரவில்லை. சாட்சி தேவையின்றி நீதிமன்ற த்திற்கு வரவழைக்கப்பட்டதையும், தள்ளி வைப்பால் குற்றம் சாட்டப்பட்டவர் தவிர்க்கக்கூடிய சிரமங்க ளைச் சந்தித்ததையும் நீதிமன்றம் பதிவு செய்ததுடன், சாட்சியின் செலவுகளுக்காக 1,000 அபராதத்தை கோவை மாவட்ட ஆட்சியர் மூலமாக அரசு ஏற்குமாறு உத்தரவிட்டது. இந்த அபராதம் முறைப்படி அரசு மீது விதிக்கப்பட்டாலும், தவறு முழுமையாக அந்த அரசு வழக்கறிஞருடையதே ஆகும். திறமைக்கு முக்கியத்துவம் தராமல் பணம் மற்றும் செல்வாக்கின் அடிப்படையில் நியமனங்கள் செய்யப்படும்போது, குற்றவியல் நீதி நிர்வாகம் பாதிக்கப்படுகிறது, பொது வளங்கள் வீணடிக்கப்படுகின்றன, சாட்சிகள் அலைக்கழிக்கப்படுகிறார்கள், குற்றம் சாட்டப்பட்டவர்கள் தேவையில்லாத சிரமங்களைச் சந்திக்கிறார்கள் மற்றும் நீதி விநியோக முறையின் மீது பொதுமக்களுக்கு உள்ள நம்பிக்கை சீர்குலைகிறது.

**கடுமையான நடவடிக்கை தேவை!**

11. மேலே குறிப்பிடப்பட்டுள்ள உண்மைகள் அனைத்தும் ஒட்டு மொத்தமாகப் பார்க்கும்போது, அரசு வழக்கறிஞர்கள் நியமனம் தொடர்பாகச் சட்டவிரோதப் பணப் பலன்களைக் கோருதல், செலுத்துதல், ஏற்றுக்கொள்ளுதல், அதற்குத் துணையாக இருத்தல் மற்றும் முறையற்ற நன்மைகளைப் பெற அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்துதல் உள்ளிட்ட ஊழல் தடுப்புச் சட்டம் 1988-இன் கீழ் பல்வேறு குற்றங்கள் முதற்கட்டமாக (Prima facie) நடந்துள்ளதை வெளிப்படுத்துகின்றன. மேலும், இந்த ஊழல் திட்டத்தை நிறைவேற்ற இடைத்தரகர்கள் மற்றும் இதர நபர்கள் கூட்டுச் சேர்ந்து செயல்பட்டதையும் இப்புகார்கள் காட்டுகின்றன. எனவே, இதில் தொடர்புடைய அனைத்து நபர்கள் மீதும் தகுந்த முதல் தகவல் அறிக்கை (FIR) பதிவு செய்து, ஊழல் தடுப்புச் சட்டம் 1988 மற்றும் பிற பொருந்தக்கூடிய சட்டங்களின் கீழ் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மரியாதையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த புகாரில் கூறப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் குறிப்பிட்டவை, நம்பகமானவை மற்றும் சரிபார்க்கக்கூடியவை. சட்டத்துறையினரிடமிருந்து பெறப்பட்ட நம்பகமான தகவல்கள், நிலுவையில் உள்ள பேராணை மனு மற்றும் நீதிமன்ற அவதானிப்புகள் ஆகியவற்றின் மூலம் இவை ஆதரிக்கப்படுகின்றன. எனவே, இது உடனடியாக வழக்குப் பதிவு செய்து முறையான விசாரணையைத் தொடங்க போதுமானதாகும்.

மேற்கூறியவற்றின் அடிப்படையில், உங்களது மதிப்பிற்குரிய அலுவலகத்தைக் கேட்டுக் கொள்வது:

அமைச்சர் புஸ்ஸி என். ஆனந்த், அமைச்சர் சி.டி.ஆர். நிர்மல் குமார், லெனின் ஜெயபாலன், பார்த்திபன், விஜயகாந்த், தபா சிவன் மற்றும் சட்டவிரோதப் பண வசூலில் ஈடுபட்டுள்ள பெயரிடப்பட்ட மற்றும் பெயரிடப்படாத இதர நபர்கள் மீது உடனடியாக FIR பதிவு செய்ய வேண்டும். இப்புகாரில் குறிப்பிடப்பட்டுள்ளபடி, தங்கள் பெயர்களில் பணம் வசூலிக்கப்பட்டதை அனுமதித்த, அறிந்திருந்த அல்லது அதன் மூலம் பயனடைந்த மேற்கண்ட அமைச்சர்களிடம் ஊழல் தடுப்புச் சட்டத்தின் கீழ் எவ்வித தயக்கமுமின்றி விரிவான விசாரணை நடத்தி, வசூலிக்கப்பட்ட ஒவ்வொரு பணப் பரிவர்த்தனையின் இறுதி இலக்கையும் பயனாளியையும் கண்டறிய வேண்டும் என அப்புகார் மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு ப.தாயகம் கவி புகார் அளித்துள்ளார்.

---

# பள்ளிகளில் அத்துமீறி விஜய் பிறந்த நாள் விழா!

## த.வெ.க. அரசு பதிலளிக்க உயர்நீதிமன்றம் உத்தரவு!

சென்னை, ஜூலை. 10–

பள்ளிகளில் அத்துமீறி விஜய் பிறந்தநாள் கொண்டாடியது தொடர்பாக பதிலளிக்க த.வெ.க. அரசுக்கு சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சென்னை உயர்நீதிமன்றத்தில் திமுக கவுன்சிலரும், வழக்கறிஞருமான கவிகணேசன் பொதுநல மனு தாக்கல் செய்திருந்தார். அதில் விஜய் பிறந்தநாளை ஒட்டி பள்ளிகளில் அத்துமீறி த.வெ.கவினர் கொண்டாட்ட நிகழ்ச்சிகள் நடத்தியதை சுட்டிக் காட்டியுள்ளார்.

மேலும், விஜயின் முகத்தை மைதானத்தில் மாணவர்களைக் கொண்டு அமைத்தும், மாணவர்களை பாடல்கள் பாட வைத்தும் த.வெ.க.வினர் அத்துமீறியதாக வழக்கறிஞர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

எனவே, இது குறித்து விரிவான விசாரணை நடத்தி பள்ளிகளில் அனுமதியளித்த அதிகாரிகள் மீதும், அத்துமீறிய த.வெ.கவினர் மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அந்த மனுவில் கோரியிருந்தார்.

இந்த மனு தலைமை நீதிபதி தர்மாதிகாரி, நீதிபதி அருள்முருகன் அமர்வில் விசாரணைக்கு வந்தது. அப்போது மனுதாரர் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் ரவீந்திரன், பள்ளிகளில் அரசியல் நிகழ்ச்சிகளுக்கு தடை விதித்த விதிகளை கண்டிப்புடன் அமல்படுத்த உத்தரவிட வேண்டும் என வாதிட்டார். இதனையடுத்து இந்த மனு மீது பதிலளிக்க த.வெ.க. அரசுக்கு நீதிபதிகள் உத்தரவிட்ட நிலையில், வழக்கு விசாரணையை 2 வாரத்திற்கு ஒத்திவைத்தனர்.

---

## சிவகங்கை கமிஷனர் நாற்காலியில் அமர்ந்த

# த.வெ.க. எம்.எல்.ஏ.வுக்கு நோட்டீஸ்!

## நகர்மன்றத் தலைவர் துரை.ஆனந்த் அனுப்பினார்!

சிவகங்கை, ஜூலை 10 –

சிவகங்கை நகராட்சி கமிஷனரின் சேரில் அமர்ந்த தவெக எம்எல்ஏவிற்கு, நகர்மன்றத் தலைவர் சார்பில் நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளது.



சிவகங்கை நகராட்சி அலுவலகத்திற்கு நேற்று முன்தினம் தவெக எம்எல்ஏ குழந்தைராணி நாச்சியார் சென்றார்.

அவர், கமிஷனர் அறைக் குச் சென்று கமிஷனர் அமர்ந்திருந்த சேரில் இருந்து அவரை எழுந்திருக்க செய்து விட்டு, அதில் அமர்ந்து ஆய்வு செய்தார். எம்.எல்.ஏ.வின் இந்த நடவடிக்கைக்கு கடும் கண்டனங்கள் எழுந்தன.

இந்நிலையில் சிவகங்கை நகராட்சி தலைவர் துரை ஆனந்த் சார்பில், வழக்கறிஞர்கள் அழகர்சாமி, கோதண்டராமன் ஆகியோர் எம்.எல்.ஏ. குழந்தைராணிக்கு நோட்டீஸ் அனுப்பியுள்ளனர்.

அதில், "நகராட்சி கமிஷனர் என்பவர் நகராட்சி நிர்வாகத் துறையால் நியமிக்கப்படும் ஒரு அரசு அதிகாரி. அவரது இருக்கை குறிப்பிட்ட நிர்வாக பதவிக்குரியது.

சட்டப்பேரவை உறுப்பினர் என்பவர் மக்கள் பிரதிநிதி நகராட்சி எல்லைக்குள் உள்ள வளர்ச்சிப் பணிகளை ஆய்வு செய்ய அவருக்கு முழு உரிமை உண்டு. ஆனால், நகராட்சி அலுவலகத்திற்கு வரும் போது, அவருக்கென ஒதுக்கப்படும் தனி அறையிலோ அல்லதுபார்வையாளர்அரங்கிலோ அமர்ந்துதான் அதிகாரிகளுடன் ஆலோசிக்க வேண்டும்.

அரசு அதிகாரியின் இருக்கையில் அமர்ந்து உத்தரவிடுவது நிர்வாக நெறிமுறைகளுக்கு எதிரானது என்று கூறியுள்ளனர்.

---

## ஊத்துக்கோட்டை - பெரியபாளையம் இடையே

# பள்ளி நேரத்தில் பேருந்துகள் இல்லாததால் மாணவர்கள் அவதி!

## கூடுதல் பேருந்துகள் இயக்க கோரிக்கை!

ஊத்துக்கோட்டை,ஜூலை.10–

ஊத்துக்கோட்டை பேருந்து பணிமனையில் இருந்து பள்ளி நேரத்திற்கு பெரியபாளையம், ஊத்துக்கோட்டைக்கு கூடுதல் பேருந்துகள் இயக்க மாணவர்கள் கோரிக்கை வைத்துள்ளனர். ஊத்துக்கோட்டை அரசு போக்குவரத்து பணிமனையில் இருந்து சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், கும்மிடிபூண்டி, மற்றும் ஆந்திர மாநிலமான புத்தூர், திருப்பதி, காளஹஸ்தி, நகரி என 30க்கும் மேற்பட்ட பேருந்துகள் இயக்கப்படுகிறது.

இந்நிலையில், நேற்று முன்தினம் மாலை ஊத்துக்கோட்டை பேருந்து நிலையத்தில் பள்ளி விட்டு வீடு திரும்பும் மாணவ – மாணவிகள் பேருந்துகள் இல்லாததால் 4.25 மணி முதல் 5.50 வரை நீண்ட நேரம் பேருந்து நிலையத்தில் காத்திருந்தனர். பின்னர் செங்குன்றத்திலிருந்து மாலை 6 மணிக்கு வந்த மாநகர பேருந்தில் மாணவர்கள் முண்டியடித்து ஏறிச்சென்றனர். ஊத்துக்கோட்டையில் இருந்து மாணவ – மாணவிகள் பள்ளிக்கு செல்லும் நேரத்திலும், வீடு திரும்பும் நேரத்திலும் கடும் அவதிப்பட்டு வருகிறார்கள். அதனால் பள்ளி நேரத்தில் கூடுதல் பஸ்களை ஊத்துக்கோட்டையில் இருந்து செங்குன்றம் வரை இயக்க வேண்டும் என மாணவ–மாணவிகளும், பொதுமக்களும் கோரிக்கை வைத்துள்ளனர்.

இது குறித்து மாணவ–மாணவிகள் கூறுகையில்: ஊத்துக்கோட்டை அரசு பள்ளியில் படிக்கும் எங்களும் பள்ளி விட்டு வீடு திரும்பும் நேரத்தில் பேருந்து நிலையத்திற்கு வந்தால் குறித்த நேரத்தில் பேருந்துகள் இல்லை. இந்த நேரத்தில் மாநகர பேருந்துகளும் இயக்கப்படுவதில்லை. உள்ளூர் பேருந்துகள் பக்கத்து கிராமங்களுக்கு மட்டுமே இயக்கப்படுகிறது. மேலும் ஊத்துக்கோட்டை முதல் பெரியபாளையம் வரை ஒரு பேருந்தாவது இயக்கினால் நன்றாக இருக்கும் என்றனர்.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### அண்ணாதாசன் (எ) டி.எஸ்.மாரிமுத்து
### ஜூலை 10 (2025)



நூலகராக பணியாற்றி வந்த இவர் பேரறிஞர் அண்ணா அவர்கள்மீதும் – கழகத்தின்மீதும் கொண்ட பற்றினால், கழகத்தில் தன்னை இணைத்து கொண்டு பணியாற்றியவர்.

திருத்துறைப்பூண்டி நகர துணைச் செயலாளர், நகர பொருளாளர், மாவட்ட பிரதிநிதி, மாவட்ட இலக்கிய அணி தலைவர் – துணை அமைப்பாளர் என கழகத்தில் பல்வேறு பொறுப்புகள் வகித்தவர்.

திருத்துறைப்பூண்டி நகர கூட்டுறவு வங்கி இயக்குநர், பெற்றோர் ஆசிரியர் சங்க தலைவர் ஆகிய பொறுப்புகள் வகித்தவர்.

பேரறிஞர் அண்ணாமீது கொண்ட பற்றால், தனது பெயரை "அண்ணாதாசன்"மாற்றிக் கொண்டவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டதோடு மிசா சட்டத்தில் கைது செய்யப்பட்டு சிறை சென்றவர்..

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**